கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 137 | 22-11-2025 | சனி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 137 | 22-11-2025 | Saturday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy



திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு நகராட்சி, சுந்தரசோழபுரம் பகுதியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகின்ற 24.11.2025 அன்று கலந்து கொள்ள உள்ள நிகழ்ச்சிக்கான இடத்தில் நடைபெற்று வரும் பணிகள் குறித்து சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் முன்னிலையில் நேரில் ஆய்வு மேற்கொண்டு துரித நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இதில் ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார்,ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா,திருவேற்காடு நகர்மன்ற தலைவர் என்.இ.கே. மூர்த்தி,திருவேற்காடு நகராட்சி ஆணையர் ராமர், ஆவடி மாநகர துணை காவல் ஆணையர் கா.பெரோஸ் கான் அப்துல்லா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மாநகரில் டாக்டர் அப்போலோ பல் மருத்துவமனை திறப்பு விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.



பல் மருத்துவமனையை தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் மதுவிலக்கு ஆயுத தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் முன்னாள் எம்பி கந்தசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் ஆகியோர்கள் முன்னிலையில் ரிப்பன் வெட்டி திறப்பு விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், டாக்டர். அப்போலோ பல் மருத்துவமனை நிறுவனர் தண்டாயுதபாணி, டாக்டர். கார்த்திகேயன், டாக்டர்.கிருத்திகா ஆகியோர்கள் கலந்து கொண்டனர். மருத்துவமனையின் திறப்பு விழாவில் குத்து விளக்கு ஏற்றி மருத்துவமனையின் ஒவ்வொரு அறைகளையும் அமைச்சர் சு.முத்துசாமி பார்வையிட்டார். டாக்டர் அப்போலோ மருத்துவமனையின் பல் மருத்துவமனையினால் பயனாளிகள் அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என நிர்வாகத்தினர் தெரிவித்தனர். திறப்பு விழா சலுகையாக பல் மருத்துவ சிகிச்சைக்கு 20% தள்ளுபடி (நிபந்தனைகளுக்கு உட்பட்டது) வழங்குவதாகவும் தெரிவித்தனர்.

# மசோதாக்கள் மீது முடிவெடுக்க ஆளுநர்களுக்கு காலக்கெடு விதிக்கும் வரை ஓயமாட்டோம்" : முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை: நவ. 22–

சட்டமுன்வடிவுகள் மீது முடிவெடுக்க ஆளுநர்களுக்குக் காலக்கெடு விதிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படும் வரை நாம் ஓயமாட்டோம் என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'மாநில உரிமைகளையும், உண்மையான கூட்டாட்சியையும் நிலைநாட்டும் நமது போராட்டம் தொடரும்.

சட்டமுன்வடிவுகள் மீது முடிவெடுக்க ஆளுநர்களுக்குக் காலக்கெடு விதிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படும் வரை நாம் ஓயமாட்டோம்.

குடியரசுத் தலைவரின் கேள்விகளுக்கு உச்ச நீதிமன்றம் அளித்துள்ள விளக்கங்கள் ஆளுநருக்கு எதிராக தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் பெற்ற 8 ஏப்ரல் 2025 தீர்ப்பின் மீது எந்தத் தாக்கத்தையும் செலுத்தாது.

சொல்லப் போனால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான் ஆட்சியைச் செலுத்த வேண்டும், மாநிலத்தில் இரண்டு அதிகார மையங்கள் இருக்க முடியாது.

அரசியலமைப்புச் சட்டத்தின் சட்டகத்துக்குட்பட்டே அரசியலமைப்புப் பதவியில் இருப்போர் செயல்பட வேண்டுமே ஒழிய, அரசியலமைப்பை மீறிச் செயல்படலாகாது.

சட்டமுன்வரைவுக்கு ஒப்புதல் மறுப்பது / (தமிழ்நாடு ஆளுநர் செய்தது போல) காலவரையின்றி ஒப்புதல் வழங்காமல் நிறுத்தி வைப்பது எனும் நான்காவது விருப்பத் தேர்வு ஆளுநருக்கு இல்லை.

மசோதாக்களின்மீது முடிவெடுக்காமல் காலவரையின்றி ஆளுநர் தாமதம் செய்ய இயலாது. அப்படி, எந்த விளக்கமும் இல்லாமல் நீண்டகாலம் இழுத்தடித்தால், மாநிலங்கள் நீதிமன்றங்களை அணுகலாம். ஆளுநர்கள் வேண்டுமென்றே தாமதிப்பதற்கு எதிராக வழக்கு தொடுத்து, கேள்விக்குட்படுத்தி நியாயம் பெறலாம்.

என்பனவற்றைத் தனது விளக்கத்தில் உச்சநீதிமன்ற அமர்வு மீண்டுமொருமுறை உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும், புனித சேவியர் கல்லூரி, அகமதாபாத் ஸ். குஜராத் அரசு (1974) 1SCC 717 வழக்கின் தீர்ப்பில் (பத்தி 109), 9 நீதிபதிகள் கொண்ட அமர்வானது, "நீதிமன்றங்கள் தெரிவிக்கும் கருத்துகள் என்பவை அரசு தலைமை வழக்கறிஞர்கள் தெரிவிக்கும் கருத்துகளைப் போன்றவை என்பதைக் கடந்து அவற்றுக்கென எந்த மதிப்பும் இல்லை." எனத் தெளிவாகக் கூறியுள்ளது.

காலவரையின்றிக் காலம் தாழ்த்தலாம், சட்டமுன்வடிவுகளுக்கு ஆளுநர்கள் ஒப்புதல் மறுக்கலாம் எனும் தமிழ்நாடு ஆளுநரின் கூற்றை உச்ச



நீதிமன்றத்தின் நேற்றைய கருத்து மீண்டுமொரு முறை நிராகரித்துள்ளது.

தமிழ்நாடு ஆளுநர் உட்பட மாநில அரசுகளுடன் மல்லுக்கட்டும் அனைத்து ஆளுநர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் வழியில் செயல்பட வேண்டும் என்பதையும், மக்களின் விருப்பத்தைச் சட்டமியற்றி நிறைவேற்றும்போது, வேண்டுமென்றே ஒப்புதல் அளிக்காமல் காலத்தைக் கடத்தினால் நீதிமன்றங்களில் அதற்குப் பதில் சொல்லியாக வேண்டுமென்பதையும் நமது சட்டப் போராட்டத்தின் மூலம் கட்டாயமாக்கியுள்ளோம். அரசியல்சட்டப்பிரிவு 361க்குப் பின்னால் ஆளுநர்கள் ஒளிந்து கொள்ள முடியாது என்பதையும் உறுதிப்படுத்தி உள்ளோம்.

அரசியல் சட்டத்தால் அமையப்பெற்ற எந்தப் பதவியும் அச்சட்டத்துக்கு அப்பாற்பட்டதில்லை என நான் திடமாக நம்புகிறேன். உயர்ந்த அரசியலமைப்புப் பதவிகளில் இருப்போரே அரசியலமைப்புச் சட்டத்தை மீறி நடந்தாலும், நீதிமன்றங்கள் தான் ஒரே நம்பிக்கை.

ஆகவே, நீதிமன்றங்களின் கதவு தீர்வுபெறத் திறந்தே இருக்க வேண்டும். அது தனது கதவுகளை அடைத்தால், நமது அரசியலமைப்பின் படியான மக்களாட்சியில் சட்டத்தின் ஆட்சியைச் சிறுமைப்படுத்திவிடும்; அரசியல் உள்நோக்கத்தோடு செயல்படும் ஆளுநர்கள் அரசியலமைப்புச் சட்டத்துக்குப் புறம்பாக நடந்துகொள்வதை ஊக்குவிக்கும்.

தமிழ்நாட்டு மக்களின் விருப்பத்தை சட்டங்களின் மூலம் நிறைவேற்ற, அரசியலமைப்புச் சட்டத்துக்குட்பட்டு அரசியலமைப்புக் கருவிகள் செயல்படுவதை உறுதிசெய்ய தொடர்ந்து உழைப்போம். எங்கள் வாக்கைக் காப்பாற்றுவோம்" எனத் தெரிவித்துள்ளார்.

## எஸ்.ஐ.ஆருக்கு எதிரான வழக்கில் தேர்தல் ஆணையம் பதில் அளிக்க உச்சநீதிமன்றம் நோட்டீஸ்..!!

புதுடெல்லி, நவ. 22–

எஸ்.ஐ.ஆர். பணிக்கு எதிராக திமுக தொடர்ந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வந்துள்ளது. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த நடவடிக்கை என்பது வாக்குரிமையை பறிப்பதாக அமையும். தேர்தலுக்கு சில மாதங்களே உள்ள நிலையில் அவசர கதியில் எஸ்.ஐ.ஆர். நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என திமுக வழக்கு தொடர்ந்துள்ளது.

இதனையடுத்து எஸ்.ஐ.ஆருக்கு தடை விதிக்க அரசியல் காட்சிகள் தாக்கல் செய்துள்ள மனுக்கள் மீதான விசாரணை வரும் நவம்பர் 26 தேதிக்கு தேர்தல் ஆணையம் பதில் அளிக்க உத்தரவிட்டு உச்சநீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது. உச்சநீதிமன்றம் நீதிபதிகள் சூர்ய காந்த், ஜாய்மல்யா பக்சி, பார்த்தி ஆகியோர் அமர்வு உத்தரவிட்டுள்ளது. கேரளாவில் உள்ளாட்சி தேர்தல் நடைபெற உள்ளதால் எஸ்.ஐ.ஆர். பணிகளை ஒத்திவைக்க அம்மாநில அரசு கோரிக்கை விடுத்துள்ளன. கேரளாவில் டிசம்பர் 9, 11ஆம் தேதிகளில் உள்ளாட்சி தேர்தல் நடைபெறவுள்ளது என அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

## அரசுப் பள்ளி மாணவர்களின் நூல் வெளியீட்டு விழா: எம்பி பங்கேற்பு



வந்தவாசி, நவ 22:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி காமராஜர் பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மாணவர்கள் எழுதிய ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியீட்டு விழா வட்டார கல்வி அலுவலர் ஆர்.செந்தமிழ் தலைமையில் நடைபெற்றது. நகர செயலாளர் தயாளன், நூலாசிரியர் கவிஞர் கன்னிகோவில் இராஜா, வட்டார கல்வி அலுவலர் எம்.தரணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி தலைமை ஆசிரியை ஆ.சித்ரா வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக ஆரணி எம்பி எம்.எஸ். தரணி வேந்தன் பங்கேற்று, மாணவர்களின் தனித் திறன்களை பற்றியும், அரசுப் பள்ளி மாணவர்கள் நூல் எழுதும் வல்லமை பெற்றவர்களாக இருப்பது தமிழகத்திற்கு மட்டுமின்றி, வந்தவாசிக்கே பெருமை என்று பாராட்டினார். மேலும் தொழிலதிபர் கவிஞர் இஷாக், நகராட்சி ஆணையர் ஆர்.சோனியா, ஒருங்கிணைப்பாளர் ஜெயசீலன், பிஆர்டி பார்த்திபன், ஒன்றிய செயலாளர் பெருமாள், நகர் மன்ற தலைவர் எச்.ஜலால், துணைத் தலைவர் அன்னை க.சீனிவாசன், கவுன்சிலர்கள் எம்.கிஷோர்குமார், மகேந்திரன், ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன், எக்ஸ்னோரா மலர் சாதிக் உள்ளிட்டோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். நூல் எழுதிய மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் பெற்றோர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பலரும் பங்கேற்றனர். நிகழ்வை பள்ளி ஆசிரியை கண்மணி தொகுத்து வழங்கினார். இறுதியில் ஆசிரியை சாந்தகுமாரி நன்றி கூறினார்.




# செஞ்சி அரசு கலை - அறிவியல் கல்லூரி புதிய கட்டிட திறப்பு விழா





செஞ்சி, நவ.22–

விழுப்புரம் மாவட்டம் சிட்டாபூண்டி கிராமத்தில் 2023–2024 ஆண்டிற்கான வரவுசெலவு திட்டத்தில் ரூ.13.92 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட செஞ்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் புதிய கட்டிடம், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் அப்துல் ரகுமான், வேலூர் மண்டலம் முனைவர் கல்லூரி கல்வி இணைய இயக்குநர், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாட்டு தமிழர் நலத்துறை அமைச்சர் கே. எஸ். மஸ்தான், ஆரணி மக்களவை தொகுதி உறுப்பினர் எம். எஸ். தரணிவேந்தன், செஞ்சி ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் ஆர். விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்றதலைவர் கே எம் எஸ் மொக்தியார் அலி மஸ்தான், அரசு கலைக் கல்லூரி முதல்வர் ஸ்ரீவித்யா அவர்கள், மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஆனந்தபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் முருகன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் அரங்கஏழுமலை, அகிலா, பார்த்திபன், சாந்தி, சுப்பிரமணி, செல்வி, ராமசரவணன், ஒன்றிய குழு துணை பெருந்தலைவர் பி.ஜெயபாலன், செஞ்சி ஒன்றியம் – விஜயலட்சுமி, மேல்மலையனூர் ஒன்றியம் – முருகன், செஞ்சி பேரூராட்சி –ராஜலட்சுமிசெயல்மணி, ஆனந்தபுரம் பேரூராட்சி –அமுதா,கல்யாணகுமார், சிட்டாபூண்டி ஊராட்சி மன்ற தலைவர் பச்சையப்பன், ஒன்றிய குழு உறுப்பினர் சித்தாமூர்த்தி, ராஜாராமன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அத்துடன், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி செஞ்சியின் அனைத்து துறை பேராசிரியர்கள், அலுவலகபணியாளர்கள், கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் இந்த விழாவில் பங்கேற்று நிகழ்வை சிறப்பித்தனர்.




நாமக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 சிறப்பு முகாம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள 57 ஏரிகளில் மீன்பாசி குத்தகை ஏலம் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தகவல்.



கள்ளக்குறிச்சி நவ 22

கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கள்ளக்குறிச்சி வட்டத்தில் முடியனூர், நாகலூர், குரூர், திம்மலை, வாழவந்தான் குப்பம், மாடூர், பெருவங்கூர், பிரிதிவிமங்கலம்,

ஏமப்பேர், சிறுவங்கூர் ஆகிய 10 ஏரிகளும், உளுந்தூர்பேட்டை வட்டத்தில் வெள்ளையூர், ஆத்தூர்பெரியஏரி, அலங்கிரி, அரளி, ஆசனூர், காட்டுநெமிலி, ஏ.புத்தூர், குஞ்சரம், மேட்டத்தூர், பு.கிள்ளனூர், பூ.மலையனூர், பரிக்கல், பில்லூர், செம்பியன்மாதேவி, செங்குறிச்சி, டி.ஒரத்தூர், உடையானத்தம், உதுப்பூர், கொரட்டூர், மடப்பட்டு, பாலி, காட்டுஎடையார், களமருதூர் ஆகிய 24 ஏரிகளும், திருக்கோவிலூர் வட்டத்தில் ஆவிகொளப்பாக்கம், எடையூர், எல்ராம்பட்டு,

குலதீபமங்கலம், முதலூர், திருப்பாலப்பந்தல், தகடி, மாடம்பூண்டி ஆகிய 08 ஏரிகளும், சங்கராபுரம் வட்டத்தில் மஞ்சப்புத்தூர், தண்டலை, பூட்டை ஆகிய 03 ஏரிகளும், வாணாபுரம் வட்டத்தில் அரியலூர், அத்தியூர், கடம்பூர், கடுவனூர், பாசார், பாக்கம், பாவந்தூர், திருவரங்கம், வாணாபுரம், சித்தப்பட்டிணம், பல்லகச்சேரி, ரிஷிவந்தியம் ஆகிய 12 ஏரிகளும் என மொத்தம் 57 ஏரிகள் www. tntenders.gov.in என்ற இணையதளத்தில் மின்னணு ஒப்பந்தப் புள்ளி மூலம் 3 ஆண்டுகளுக்கு மீன்பாசி குத்தகை விடப்பட உள்ளன.

மேலும் கூடுதல் விவரங்களுக்கு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகம், நெ.62/56கி, தாட்கோ வளாகம், விழுப்புரம்605 602, fisherme nwelfare vpm@gmail.com என்ற இணையதளத்திலும், 04146259329 என்ற

தொலைபேசி எண்ணிலும், விழுப்புரம் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகிடலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எஸ். பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

இருக்கும் போது
ரத்ததானம்.... இறந்த
பின் கண்தானம்
செய்வீர்...

# நவ 23ந்தேதி முதல் டிசம் 2 வரை துப்பாக்கி சுடும் பயிற்சி

## பயிற்சி தளத்தில் எவரும் பிரவேசிக்கக் கூடாது மாவட்ட ஆட்சியர் எச்சரிக்கை

திருச்சி. நவ. 22–

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், அணியாப்பூர் கிராமம், வீரமலைப்பாளையத்தில் உள்ள துப்பாக்கி சுடும் இடத்தில், 27 Bn ITBP, MHA/Govt of India, Sanatorium Nooranad, Alappuzha (Kerala) பயிற்சியாளர்களால் 23.11.2025 ஆம் தேதி முதல் 02.12.2025 ஆம் தேதி வரையும், காலை 7.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையும், மாலை 07.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையும்; துப்பாக்கி சுடும் பயிற்சி நடைபெற இருப்பதால், அச்சமயம் மேற்கண்ட பயிற்சி தளத்தில்; மேய்ச்சலுக்காக கால்நடைகள் மற்றும் மனித நடமாட்டம் எதுவும் இருக்கக் கூடாது எனவும், மேலே குறிப்பிட்டுள்ள பயிற்சி தளத்தில் எவரும் பிரவேசிக்கக் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு தகவல் ஆணையர் சந்திப்பு



தமிழ்நாடு மாநில தகவல் ஆணையராக இருந்து வரும், வி. பி. ஆர் இளம் பரிதி, ஈரோடு தெற்கு மாவட்ட திமுக பொருளாளர், மாநகராட்சி 1,வது மண்டல குழு தலைவர், சேலம் கோட்ட ரயில்வே ஆலோசனைக் குழு உறுப்பினர் பி. கே. பழனி சாமியை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து உரையாடினார்.

# களைகட்டும் சேவல் சண்டை கண்டுகொள்ளாத போலீசார்

## நடவடிக்கை எடுக்க சமூக ஆர்வலர்கள் கோரிக்கை.

மணப்பாறை நவ. 22

திருச்சி மாவட்டம் வையம்பட்டி மணப்பாறை எளம் மனம் புத்தாநத்தம் வீரப்பூர் அணியாப்பூர் அமையபுரம் இதனை உள்ளடக்கிய பகுதிகளில் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமப்புற பகுதிகளில் களைக்கட்டும் சூதாட்ட கும்பல் மற்றும் சேவல் சண்டை நடைபெற்ற வரும் நிலையில் சூதாட்டம், நடைபெறும் இடங்களிலும் அதன் அருகிலேயே வட்டிக்கு விடும் கும்பல் இதனால் பல குடும்பங்கள் சீரழியும் அவல நிலை இது குறித்த வீடியோக்களை சமூக வலைதளங்களில் பதிவிட்ட சமூக ஆர்வலர்கள் இவ்வாறான சம்பவங்கள் குறித்து திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனிப்படை அமைத்து நடவடிக்கை எடுக்க சமூக ஆர்வலர்கள் கோரிக்கை. விடுத்துள்ளனர்.

# வடமதுரை பகுதியில் லஞ்ச ஒழிப்புத்துறையை கண்டித்து ஓட்டப்பட்ட போஸ்டர்கள்.

திண்டுக்கல், நவ.22

திண்டுக்கல் மாவட்டம் வடமதுரையில் சார்பதிவாளர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இங்கு சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த பொது மக்கள் திருமணம், பிறப்பு, பத்திரப்பதிவு உள்ளிட்ட பதிவுக ளுக்கு தினமும் வந்து செல்கின்றனர். இந்த அலுவலகத்திற்கு கடந்த 14 ஆண்டுகளாக நிரந்தரமாக




சார்பதிவாளர் இல்லை. இதனால் முக்கியமான பதிவு பணிகள் கிடப்பில் விடப்படுவதால் பொது மக்கள் மாதக்கணக்கில் அலையும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். ஆள்பற்றாக்குறை, லஞ்சம் உள்ளிட்ட பிரச்சினைகள்

குறித்து பாதிக்கப்பட்ட வர்கள் உயர் அதிகாரிகளுக்கு மனு அளித்தும் தீர்வு கிடைக்கவில்லை. இந்தநிலை யில் வடமதுரை பகுதியில் அக்கப்போர் இயக்கம் என்ற பெயரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அதில் வடமதுரை சார்பதிவகத்தில் நடக்கும் லஞ்சம் தொடர்பாக திண் டுக்கல், சென்னை லஞ்ச ஒழிப்பு துறைக்கு பாதிக்கப்பட்ட பொதுமக்கள் பல புகார்கள் அனுப்பியும், போனில் சொல் லியும் நடவடிக்கை இல்லை. இதனால் லஞ்ச ஒழிப்புத்துறை தூங்குகிறதா? என்ற வாசகங்கள் இடம் பெற்றுள்ளது. மாவட்ட நிர்வாகம் இது குறித்து நடவடிக்கை எடுக்க கோரிக்கை.



வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி குறித்து வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி வீட்டு உபயோக எரிவாயு உருளைகளில் ஒட்டுவில்லைகளை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஷாலினி, மாவட்ட மேலாளர் மாணிக்கம், வட்டாட்சியர் சீனிவாசன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

# தேசிய கராத்தே போட்டியில் திகழ்ந்த ஈரோடு மாணவர்கள் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த வரலாற்றுச் சாதனை!





ஈரோடு, நவ. 22–

மத்திய பிரதேசம், குவாலியர் நகரில் நடைபெற்ற C.B.S.E பள்ளிகளுக்கான தேசிய கராத்தே போட்டியில், நாட்டின் பல்வேறு மாநிலங்களில் இருந்து 250க்கும் மேற்பட்ட பள்ளிகள் பங்கேற்று திறமைகளை வெளிப்படுத்தின.

இந்த உயரிய போட்டியில், ஈரோட்டைச் சேர்ந்த Erode Public School மாணவர்கள் கலந்துகொண்டு சிறப்பான திறமையால் அனைவரையும் கவர்ந்தனர்.

2025 நவம்பர் 15 முதல் 18ஆம் தேதி வரை நடைபெற்ற 1st CBSE National Karate Championship போட்டியில், நமது பள்ளி மாணவர்கள் முதல் முறையாக தேசிய போட்டியில் வரலாற்றுச் சாதனை படைத்தனர்.

S.N. நிதீசன் (Grade 7) — வெள்ளிப்பதக்கம் , R. கபிலன் (Grade 7) — வெண்கலப் பதக்கம் அவர்களின் இந்த அபார சாதனை, தமிழகத்திற்கும் Erode Public School பள்ளிக்கும் பெருமை சேர்த்துள்ளது என்பது அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. இந்த வெற்றிக்குப் பின், சாதனை படைத்த இரு வீரர்களும் ஈரோடு ரயில் நிலையம் வந்தடைந்தபோது, அவர்களின் கராத்தே பயிற்சியாளர் R. Suresh (ஆசிய நடுவர்) மற்றும் பெற்றோர்களையும், சக மாணவர்கள் உள்ளிட்ட அனைவராலும் உற்சாகமான சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது. மேலும், இந்த சிறப்பு வரவேற்பு நிகழ்வைச் சிறப்பாக ஒருங்கிணைத்த பள்ளியின் தாளாளர், முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகக் குழுவினர் இரு மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.



இந்திய குடியரசு தலைவரின் தலைமையில் 18–11–2025 அன்று புதுடெல்லி விஞ்ஞான் பவனில் நடைபெற்ற 6வது தேசிய நீர் விருதுகள் –ஜல் சஞ்சய் ஜன் பாகீதாரி 1.0விருது வழங்கும் விழாவில் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்திக்கு JSJB முன்முயற்சியின் கீழ் 7057 நீர் பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டதற்காக ரூ.25 லட்சம் ரொக்க ஊக்கத் தொகை மற்றும் வகை 3ல் JSJB 1.0 விருது வழங்கப்பட்டது.

# உலக குழந்தைகள் தினத்தையொட்டி மாணவர்களுக்கு பரிசுகள்..!



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஊராட்சி ஒன்றிய (மே) தொடக்கப் பள்ளியில் உலக குழந்தைகள் தினத்தையொட்டி நடைபெற்ற நிகழ்வில் பல்திறன் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பள்ளி தலைமை ஆசிரியை வேளாங்கண்ணி, ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன், திரைப்பட இயக்குநர் விஜய் ஆதிநாதன், எய்டு இந்தியா திட்ட மேற்பார்வையாளர் க.முருகன், உதவி ஆசிரியை சுஜாதா உள்ளிட்டோர் பங்கேற்று கருத்துரைகளை வழங்கினர். மேலும் மாணவர்கள் திருக்குறள் மற்றும் பழமொழிகளை வாசித்தனர்.

புதுச்சேரி கடலோர பாதுகாப்பை பலப்படுத்த திட்டம்:

# முதல்வர் ரங்கசாமியுடன் கடலோர காவல்படை கமாண்டர் முக்கிய சந்திப்பு!

## உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் குறித்து விரிவான ஆலோசனை



புதுச்சேரி: நவ. 22–

புதுச்சேரி மற்றும் மத்திய தமிழ்நாடு பிராந்தியத்திற்கான இந்திய கடலோர காவல்படையின் (Indian Coast Guard) உள்கட்ட மைப்பை மேம்படுத்துவது தொடர்பாக, கடலோர காவல்படை கமாண்டர் டசிலா (Commander Dasila), புதுச்சேரி முதலமைச்சர் என். ரங்கசாமியை நேரில் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

புதுச்சேரி சட்டப்பேரவை வளாகத்தில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. புதுச்சேரி மற்றும் மத்திய தமிழ்நாடு கடலோரப் பகுதிகளின் பாதுகாப்பிற்குப் பொறுப்பு வகிக்கும் கமாண்டர் டசிலா, முதலமைச்சரை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார். இருப்பினும், இந்தச் சந்திப்பு வெறும் அறிமுகத்துடன் நின்றுவிடாமல், மாநிலத்தின் கடலோரப் பாதுகாப்பு சார்ந்த முக்கிய விவாதமாகவும் அமைந்தது.

இந்தச் சந்திப்பின் போது, புதுச்சேரியில் இந்திய கடலோர காவல்படையின் செயல்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவது குறித்தும், அதற்கான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்தும் இருவரும் விரிவாகப் பேசினர். குறிப்பாக, கடலோரப் பகுதிகளில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்துதல், நவீன தொழில்நுட்பங்களை நிறுவுதல் மற்றும் கடலோர காவல்படை வீரர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவை குறித்து ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

புதுச்சேரி யூனியன் பிரதேசம் நீண்ட கடற்கரையைக் கொண்டிருப்பதாலும், சுற்றுலாப் பயணிகள் மற்றும் மீனவர்களின் நடமாட்டம் அதிகம் இருப்பதாலும், கடலோரப் பாதுகாப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. எனவே, கடலோர காவல்படையின் திட்டங்களுக்கு புதுச்சேரி அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பின் மூலம், வரும் காலங்களில் புதுச்சேரி கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலும் பலப்படுத்தப்படும் என்றும், உள்கட்டமைப்புப் பணிகளில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும் தெரிகிறது.

# புதுச்சேரி ஜனநாயகத்தை பணத்தால் வாங்க முடியாது 2026ல் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி ஆட்சியை பிடிக்கும்

## எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா நம்பிக்கை பேச்சு



புதுச்சேரி, நவ. 22–

புதுச்சேரி ஜனநாயகத்தை பணபலத்தால் வாங்க முடியாது என்றும் 2026 சட்டமன்ற தேர்தலில் புதுச்சேரியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி ஆட்சியை பிடிக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி மாநில திமுக செயற்குழு கூட்டத்தில் மாநில திமுக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் பேசியதாவது:

தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை மிகச்சிறப்பாக கொண்டாட வேண்டும். தொகுதிகள்தோறும் ரத்ததானம், மரக்கன்றுகள் நடுவது, நலத்திட்டங்கள் வழங்குவது போன்றவற்றை செய்ய வேண்டும். பல தொகுதிகளில் சுவர் விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது. இன்னும் சில தொகுதிகள் செய்யப்படாமல் உள்ளது. இது நம்மை அடையாளப்படுத்துவதற்கும், கட்சியின் வளர்ச்சியை சொல்வதற்குமாகும். அரசு பேனர் வைக்ககூடாது என கூறியுள்ளனர். நாம் முழுமையான ஒத்துழைப்பை அரசுக்கு கொடுக்க வேண்டும். உலகம் போற்றும் தலைவராக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளார். அந்த சாரலில் தான் புதுவையில் இந்த கட்சி 27 ஆண்டுகள் ஆட்சியில் இல்லாமல் இருந்தால் கூட இன்னும் வீறுகொண்டு தான் இருக்கிறது.

முன்னாள் முதல்வர் நாராயணசாமிக்கு நன்றி சொல்ல வேண்டும். நெல்லித்தோப்பு தொகுதியை நாம் அவரிடம் கொடுத்தோம். பிறகு அவர் செல்லும் போது நம்மிடம் கொடுத்துவிட்டு சென்றுள்ளார். அவர் வீதி வீதியாக சென்று எஸ்ஐஆர் பற்றி பதிவு செய்கிறார். அவர் நாம் வெற்றிப்பெறுவதற்கு முழுமையாக உழைக்கிறார். கூட்டணிக்கு வேலை செய்ய தயாராகிவிட்டார்.


இன்றைக்கு புதுச்சேரியில் முதன்மை கட்சி திமுக தான். எந்த கட்சிக்கும் இதுபோன்ற கட்டமைப்பு கிடையாது. நூற்றாண்டுகள் கண்ட கட்சி, பல போராட்டங்களை கண்ட கட்சி. எத்தனையோ பண முதலாளிகள் புதுச்சேரியில் வேலை பார்த்தாலும், நம்மளை தொட்டு பார்க்க முடியாது. மக்களுக்காக தொண்டு செய்கிறோம். வாய்ப்பு இருந்தால் வெற்றி பெறுவோம், இல்லையென்றால் தொடர்ந்து சேவை செய்வோம். புதுச்சேரி மக்கள் நம்மளை நம்பி இருக்காங்க. அமைதியாக ஆர்பரிப்பு இல்லாமல் அரசியல் செய்கிறோம். 25 தொகுதிகளில் இன்று வெற்றி வேட்பாளர்கள் தயாராக உள்ளனர். யாருக்கு சீட் கொடுத்தாலும், வெற்றி பெற வைப்போம். நம்மை வீழ்த்த வீயூகம் அமைக்கின்றனர். பாஜக, என்.ஆர்.காங்கிரஸ் பெயரை கூறி ஓட்டு வாங்க முடியாது. நம் தொகுதிகளில் பல தொல்லைகள் கொடுக்கின்றனர். தன்மானம், சுயமரியாதை உள்ள புதுச்சேரி மக்களை பணத்தால் வாங்க முடியாது.

இது மாநில சுயாட்சிக்காக போராடிய இயக்கம். இந்த ஆட்சியின் அவலத்தை மக்களிடம் எடுத்துகூறவேண்டும். தேர்தலில் கூறியதை ஒன்று கூட செய்யவில்லை. ஏர்போர்ட் விரிவாக்கம், ரயில் சேவை விரிவாக்கம், புதிய தொழில்சாலை எதுவும் செய்யவில்லை. ஐடி பார்க் வரவேண்டும். இலவச மனைப்பட்டா கிடைக்க வேண்டும். வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும். லிங்கா ரெட்டிப் பாளையம் சர்க்கரை ஆலையை திறக்க வேண்டும். மூடப்பட்டுள்ள ஆலைகளை திறக்க வேண்டும். மூடப்பட்டுள்ள 19 பொது நிறுவனங்களை மீண்டும் திறக்க வேண்டும். அதிக காலம் முதல்வராக உள்ளவர் முதல்வர் ரங்கசாமி. இதுவரை ஒரு நிறுவனத்தை கூட அவர் திறக்கவில்லை. சேதராப்பட்டு சிறப்பு பொருளாதார மண்டலம் அமைக்க கையகப்படுத்தப்பட்ட நிலம் கிடப்பில் கிடக்கிறது.

மின்துறையை தனியார் மயம் ஆக்குவதற்கு அரசு சார்பில் மின்மீட்டர் வாங்கி அதனை தனியாரிடம் ஒப்படைக்க பார்க்கின்றனர். அதனை வெளிப்படையாக அமல்படுத்த முடியவில்லை. மத்திய, மாநில அரசுகள் மாநில வளர்ச்சிக்கு ஒன்றும் செய்யவில்லை. இன்னும் இரண்டு மாதம் உள்ளது. இனிமேல் இவர்கள் கொண்டுவரும் திட்டங்களை செய்ய முடியாது. பீகாரை போன்று வாக்கு திருட்டு, அரசு பணத்தை கொடுத்து வாக்குகளை வாங்க பார்ப்பார்கள். பணத்தால் புதுவை ஜனநாயகத்தை வாங்க முடியாது. புதுச்சேரி திமுககாரர்கள் தகுதியற்றவர்கள் என்று யாரும் நினைக்க வேண்டாம். நாங்கள் புதிதாக தேர்தலை சந்திக்கவில்லை. பல தேர்தலை பார்த்தவர்கள். எந்தவித சலசலப்புக்கும் அஞ்சுவதில்லை. உங்களிடம் உள்ள பணத்தை வைத்து சர்க்கரை ஆலையை திறந்தால் நல்லது. தேர்தலுக்காக மாறுபவர்கள் நம் கூட்டணியில் இல்லை. 30 தொகுதிகளிலும் வேலை செய்ய சொல்லி இருக்கிறார்கள். கூட்டணி கட்சிக்காரர்களுக்கும் நாம் உழைக்க தயாராக இருக்கிறோம். எஸ்ஐஆர் பதியும் போது பெயர் நீக்கப்படுவது, பிஎல்ஓ எதிர்ப்பாக செயல்படுகிறார் போன்ற பிரச்னை இருந்தால் உடனடியாக தெரியப்படுத்த வேண்டும். சார்லஸ் மார்டின் பாஜகவின் பிடம். தமிழக அரசின் சாதனைகளை சொல்லி நம் அணி வெற்றி பெற பாடுபடவேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# புதுச்சேரி மீனவர் இலவச கல்வி திட்டம் குறித்து மீன்வளத்துறை இயக்குனரிடம் எம்எல்ஏ அனிபால் கென்னடி ஆலோசனை



புதுச்சேரி, நவ. 22–

புதுச்சேரி மாநில மீனவர் சமூக நலனுக்காக இலவசமாக ஆரம்ப கல்வி முதல் உயர் கல்வி வரை வழங்கும் திட்டத்தை சட்டமன்றத்தில் வலியுறுத்திப் பெற்றுத்தந்த உப்பளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அனிபால் கென்னடி அவர்கள், அந்த திட்டம் இன்னமும் அமலுக்கு வராத நிலையில் நேற்று மீன்வளத் துறை இயக்குனர் முகமது இஸ்மாயில் அவர்களை நேரில் சந்தித்து இது குறித்து கேட்டறிந்தார்.

அரசு அனுமதி பெற்றுள்ள இந்த கல்வித் திட்டம் தாமதமாவதன் காரணமாக, தேவையான பணிகள் நடைபெற்று வருவதாகவும், விரைவில் திட்டம் நடைமுறைக்கு வரும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் இயக்குனர் தெரிவித்தார்.

இதற்கிடையில், உப்பளம் தொகுதி நேதாஜி நகர் – துறைமுக இணைப்புச் சாலை பகுதியில் பெண்கள் சாலையோரத்தில் மீன் விற்பனை செய்ததன் காரணமாக நீண்ட நாட்களாக கடுமையான போக்குவரத்து நெரிசல் நிலவி வருகிறது. இந்த பிரச்சனைக்கு தீர்வாக சிமிஜிமிமிஷி திட்டத்தின் மூலம் ரூ.2.25 கோடி செலவில் நவீன வசதிகளுடன் மீன் மார்க்கெட் அமைக்கும் பணியை சட்டமன்ற உறுப்பினர் அனிபால் கென்னடி அவர்கள் பூமி பூஜை செய்து தொடங்கி வைத்திருந்தார்.

பணிகள் முழுமையாக நிறைவடைந்த போதிலும், இந்த நவீன மீன் சந்தை இதுவரை பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்படவில்லை. இது தொடர்பாகவும் அவர் இயக்குனரிடம் கேட்டு, பொது மக்களின் சிரமத்தை தீர்க்க விரைவாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

மீன் மார்க்கெட்டை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகள் அதிகாரிகள் மற்றும் பஞ்சாயத்து நிர்வாகத்துடன் நடைபெற்று வருவதாக இயக்குனர் தெரிவித்தார். இதனை மேலும் துரிதப்படுத்தி, மீனவர் சமூகம் மற்றும் பொது மக்கள் உடனடி யாக பயனடைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்தார்.

இந்த சந்திப்பில் மாநில மீனவர்கள் அணி அமைப்பாளர் கோதண்டம், கிளை செயலாளர் ராகேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





திருப்பூர் தாராபுரம் ரோடு செட்டிபாளையம் அடுத்த பூங்கா நகர் பின்புறம் உள்ள ஸ்ரீநகர் பகுதியில் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்த நிலையில் அப்பகுதியில் மனைப்பிரிவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட 5 சென்ட் நிலத்தில் விநாயகர் மற்றும் வாராஹி அம்மன் கோவில் கட்டி முடிக்கப்பட்டு வருகிற டிசம்பர் 1 ஆம் தேதி கும்பாபிஷேகத்திற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்த நிலையில் கரைப்புதூர் ஊராட்சி சார்பாக கோயில் முன்பு அறிவிப்பு பதாகை வைத்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அந்த அறிவிப்பு பதாகையில் திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியம் கரைப்புதூர் கிராம ஊராட்சிக்கு உட்பட்ட ஸ்ரீநகர் எக்ஸ்டென்ஷன் என பெயரிட்டுப்பட்டுள்ள மனை பிரிவில் உள்ள 80 சென்ட் இடம் ஊராட்சிக்கு சொந்தமான இடம் இந்த இடத்தில் மத வழிபாட்டு தலங்கள் கட்டிடங்கள் ஏதும் கட்டக் கூடாது என கரைப்புதூர் ஊராட்சி சார்பாக அறிவிப்பு பதாகை வைக்கப்பட்டுள்ளதால் ஆத்திரமடைந்த அப்பகுதி ஊர்பொதுமக்கள் மற்றும் இந்து முன்னணி நிறுவனர் திரண்டு அப்பகுதி தங்களுக்கு வழிபட்டுத்தளம் வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தகவல் அறிந்த போலீசார் அங்கு குவிக்கப்பட்டுள்ளதால் பரபரப்பாக காணப்படுகிறது.



புதுச்சேரி இலாசுப்பேட்டை தொகுதி சாந்தி நகர் (வடக்கு) பகுதியை சார்ந்த முன்னாள் நாட்டாண்மை சுப்புரமணி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, முன்னாள் சபாநாயகரும் இலாசுப்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான சப்தகிரி V.P.சிவக்கொழுந்து அவர்களை நேரில் சந்தித்து ஆசி பெற்றார். அவருக்கு ஸ்ரீ சப்தகிரி அறக்கட்டளையின் பொறுப்பாளர் ரமேஷ்குமார் அவர்கள் பிறந்த நாள் வாழ்த்துக்களை கூறினார். உடன் இலாசுப்பேட்டை N.R.காங்கிரஸ் (சாந்தி நகர் வடக்கு) பகுதியின் நிர்வாகிகள் இருந்தனர்.

# மக்களின் வரிப்பணம் வீணாகிறது!



புதுச்சேரி, நவ. 22

புதுச்சேரி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட அடுக்கு மாடி குடியிருப்புகளை ரோஸ்ட் சார்லஸ் மாட்டின் திடீரென பார்வையிட்டார்.

அங்கே நிருபவர்களை சந்தித்த அவர் புதுவை ராஜ்பவன் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட குமர ஒரு பள்ளத்தில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் 12 அடுக்கு கொண்ட 216 வீடுகள் உள்ளது, அங்கு வசித்த மக்கள் பல மாதங்களாக வாடகை வீட்டில் வசித்து வருவதாகவும் வாடகை கொடுக்க முடியாமல் மக்கள் தவித்து வருவதாகவும் பேசினார், மேலும் மக்களின் வரிப்பணத்தில் கட்டப் பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளை அரசு உடனடியாக மக்களிடம் ஒப்படைக்கும்படி ஜோஸ் சார்லஸ் நாட்டில் கேட்டுக் கொண்டார், JCM மக்கள் மன்ற தலைவர் ரீகன் மற்றும் காமராஜர் நகர் தொகுதி தலைவர் விஜயராஜ் மற்றும் நிர்வாகிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் உடன் இருந்தனர்.

# தலைமை ஆசிரியர் திட்டியதாக கூறி திருப்பூரில் அரசு பள்ளி மாணவர்கள் சாலை மறியல்

திருப்பூர் :நவ.22–

திருப்பூர் காதர் பேட்டையில் நஞ்சப்பா அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி உள்ளது. இங்கு 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். மிகவும் பழமையான பள்ளி என்பதால் திருப்பூர் மாநகரின் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து ஏராளமான மாணவர்கள் பஸ்கள் மூலம் இங்கு வந்து கல்வி பயின்று வருகின்றனர்.

இந்த நிலையில், 10 மற்றும் 11, 12ம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வு விரைவில் வரும் சூழலில் அவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு 7 மணி வரை சிறப்பு வகுப்புகள் நடைபெற்றதால், மாநகரின் பல்வேறு பகுதிகளுக்கு செல்லக்கூடிய மாணவர்கள் பஸ்கள் இன்றி மிகவும் சிரமப்பட்டனர். வீடுகளுக்கு செல்லவே இரவு 8 மணிக்கு மேல் ஆனதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையே, நேற்று காலை மாணவர்கள் பள்ளிக்கு தாமதமாக வந்துள்ளனர். அந்த மாணவர்களை ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர் பள்ளிக்கு தாமதமாக வந்தது குறித்து கேள்வி எழுப்பியுள்ளனர். அப்போது மாணவர்களை ஆபாசமான வார்த்தைகளில் திட்டியதாக கூறி 11 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்கள் 100க்கும் மேற்பட்டோர் திருப்பூர் ரயில் நிலையம் அருகே சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், அங்கு சிறிது நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாய பெருமகக்ளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று குறைகளை கேட்டறிந்தார்.



அமைச்சர் சாமிநாதன் ஈரோடு மாவட்டம், சித்தோடு ஆவின் பால்பண்ணை வளாகத்தில் பால்வளத்தந்தை ஐயா எஸ். கே. பரமசிவன் அவர்களின் முழுதிருவுருவச்சிலை அமைக்கப்பட்டு வரும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார் உட்பட பலர் உள்ளனர்.

# சேலம் மேற்கு எம்எல்ஏ அருள் பெயரில் ராமதாஸ் தொடங்கும் புதுக்கட்சி. ராமதாஸ் தொடங்கும் புதுக்கட்சி. உருவாகிறது அய்யா பாமக.100 பேரிடம் பிரமாண பத்திரம்.

சேலம் மேற்கு எம்எல்ஏ அருள் பெயரில் இந்த புதுக் கட்சி தொடங்கப்படுகிறது. புதிய கட்சியை தொடங்க 100 பேரிடம் பிரமாண பத்திரத்தை பெறும் பணி தொடங்கியதாகவும் கூறப்படுகிறது.

பாமகவில் ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக இன்னும் ஓரிரு நாட்களில் மருத்துவர் ராமதாஸ் அய்யா பாமக என்ற புதுக் கட்சியை ஆரம்பிக்க உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. பாமகவில் தந்தை, மகன் அதிகார மோதலை தொடர்ந்து ராமதாஸ் தலைமையில் ஒரு அணியும், அன்புமணி தலைமையில் மற்றொரு அணியும் செயல்பட்டு வருகிறது.

இந்த இரு அணியினரும் போட்டி கூட்டங்களை நடத்தி தங்களது ஆதரவாளர்களை திரட்டி வருகின்றனர். மாம்பழம் சின்னத்தை தங்களுக்கே ஒதுக்க வேண்டும் என இரு அணியினரும் தனித்தனியாக தேர்தல் கமிஷனுக்கு மனு அளித்துள்ளனர்.வரும் 2026 சட்டமன்ற தேர்தலை மனதில் கொண்டு இரு அணிகளும் தீவிரம் காட்டி வருன்றனர். இந்நிலையில் திண்டிவனம் அடுத்துள்ள தைலாபுரம் தோட்டத்தில் கடந்த சனிக்கிழமை ராமதாஸ் தலைமையில் வழக்கறிஞர் சமூக நீதி பேரவை மாநில செயற்குழு கூட்டத்தை நடத்தினர்.

இதனை தொடர்ந்து திண்டிவனத்தில் தனியார் மகாலில் கடந்த 18ம் தேதி பாமக வன்னியர் சங்க மாவட்ட செயலாளர்கள், தலைவர்கள் கூட்டமும் மறுநாள் இளைஞர் சங்க மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டமும் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்த கூட்டத்தில் கலந்து கொள்ள அனைத்து நிர்வாகிகளுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டு இருந்தது.இந்த கூட்டத்தில் கட்சியின் அடுத்த கட்ட நடவடிக்கைகள், போட்டி கூட்டங்கள் நடத்தி வரும் அன்புமணி அணியினரை எதிர் கொள்வதும் குறித்தும், வருகிற சட்டமன்ற தேர்தலில் யாருடன் கூட்டணி வைப்பது? உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து டாக்டர் ராமதாஸ் ஆலோசனை நடத்த இருந்தார்.



2026 சட்ட மன்ற தேர்தல் பணிகளை கவனிக்க மூத்த தலைவர்களுக்கு மாவட்ட வாரியாக பொறுப்புகள் கொடுத்து தேர்தல் பணிகளை துரிதப்படுத்தவும் டாக்டர் ராமதாஸ் முடிவு செய்து இருந்ததார். ஆனால், கனமழையால் திண்டிவனத்தில் நடைபெற இருந்த கூட்டங்கள் ரத்து செய்யப்பட்டது. இந்நிலையில் டாக்டர் ராமதாஸ் தற்போது மவுனம் காத்து வருகிறார். வழக்கமாக டாக்டர் ராமதாஸ் திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் வியாழக்கிழமை தோறும் நிருபர்களை சந்திப்பது வழக்கம். ஆனால் கடந்த வாரமும், நேற்றும் அவர் நிருபர்களை சந்திக்கவில்லை.

இந்நிலையில் ராமதாஸை தங்கள் கூட்டணிக்குள் கொண்டு வர பல்வேறு அரசியல் கட்சிகள் முயன்று வருகிறது. சில கட்சிகள் இருவரையும் சமாதானப்படுத்தவும் முயன்று வருகிறனர். ஆனாலும் ராமதாஸ் எந்த கட்சிகளுக்கும் பிடி கொடுக்காமல் இருந்து வருகிறார். கூட்டணி தொடர்பாக டிசம்பர் மாதம் 30ம் தேதி சேலம் மாவட்டம், தலைவாசலில் நடைபெறும் சிறப்பு பொதுக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என டாக்டர் ராமதாஸ் ஏற்கனவே கூறி இருக்கிறார்.

இந்த கூட்டத்திற்கு முன் தேர்தல் ஆணையத்தின் பதில் கிடைத்து விடும் எனவும் அவர் நம்பிக்கையாக இருக்கிறார். எனவே தேர்தல் ஆணையத்தின் முடிவுக்கு பின்னரே அவர் கூட்டணி தொடர்பாக அறிவிப்புகளை வெளியிட இருப்பதாக கூறப்படுகிறது. பாமகவை கைப்பற்றும் சட்ட போராட்டத்தில் பின்னடைவு ஏற்பட்டால் அதனை சமாளிக்கும் விதமாக ராமதாஸ் தனிக்கட்சி தொடங்க திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்தக் கட்சி ‘அய்யா பா.ம.க.’ என்ற பெயரில் பதிவு செய்ய உள்ளதாகவும், ராமதாஸ் ஒரு கட்சியின் நிறுவனராக இருப்பதால் அவர் பெயரில் புதிய கட்சியை பதிவு செய்ய முடியாது என்பதால் ஆதரவாளர் பெயரில் தொடங்க திட்டம் எனவும் கூறப்படுகிறது. சேலம் மேற்கு எம்எல்ஏ அருள் பெயரில் இந்த புதுக் கட்சி தொடங்கப்படுகிறது. புதிய கட்சியை தொடங்க 100 பேரிடம் பிரமாண பத்திரத்தை பெறும் பணி தொடங்கியதாகவும் கூறப்படுகிறது.

# திருவள்ளூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் குழந்தைகளுக்கான பாதுகாப்பு நடைப்பயண விழிப்புணர்வு நிகழ்ச்சி

## மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் கொடியசைத்து துவக்கி வைத்தார் :



திருவள்ளூர் நவ 22 : திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் குழந்தைகள் தின விழா தொடர்ச்சியாக மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் குழந்தைகளுக்கான நடைப்பயண விழிப் புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமையில் 250க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு குழந்தைகள் பாதுகாப்பு உறுதி மொழியினை ஏற்றுக் கொண்டு, நடைப் பயணத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

குழந்தைகள் பாதுகாப்பு அலகின் மூலம் நவம்பர்14 தேசிய குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, சர்வதேச குழந்தைகள் பாலியல் துன்புறுத்தல் மற்றும் வன்முறையிலிருந்து காத்தல் குறித்த தினம் நவம்பர் 18, தேசிய குழந்தைகள் துன்புறுத்தல் தினம் நவம்பர்19, சர்வதேச குழந்தைகள் தினம் நவம்பர் 20 ஆகிய தினங்களை அனுசரிக்கும் விதமாக மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம் மற்றும் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை சார்பாக குழந்தைகள் உரிமை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமையில் கையெழுத்து இயக்கம், பிரச்சாரம் மற்றும் பேரணி “குழந்தை களுக்கான நடை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இத்தினத்தில் கையெழுத்து இயக்கமும், ஷெல்டர் ட்ரஸ்ட் குழந்தைகள் இல்லத்தின் வாயிலாக வீதிநாடகமும், ஐ.ஆர்.சி.டி.எஸ் தொண்டு நிறுவனத்தின் மூலம் வாகன பிரச்சாரமும், சட்டக்கல்லூரி மாணவர்களைக் கொண்டு பேரணி மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து சென்னை சில்க்ஸ் வரையும் நடத்தப்பட்டது. மேலும், திருத்தணியில் செயல்படும் மருந்தியல் கல்லூரி மாணவியர் களைக்கொண்டு விழிப்புணர்வு ரங்கோலி மற்றும் குழந்தை உரிமைகள் குறித்த விழிப்புணர்வு அரங்கம் அமைத்து சிறப்பிக்கப் பட்டது.

இதில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் நிஷாந்தினி, நன்னடத்தை அலுவலர் சுதா, குழந்தைகள் நலக்குழு உறுப்பினர்கள் ரமேஷ் மற்றும் ஜோன்னா, சட்டக் கல்லூரி முதல்வர் கயல்விழி,திருத்தணியில் செயல்படும் மருந்தியல் கல்வியியல் கல்லூரி முதல்வர் ராதிகா வித்யாசாகர், பாதுகாப்பு அலுவலர் (நிறுவன சாரா) மலர்விழி, ஐ.ஆர்.சி.டி.எஸ் தொண்டு நிறுவனர் ஸ்டீபன் ராஜ், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் பணியாளர்கள் மற்றும் சைல்டு லைன் பணியாளர்கள், மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தேசிய அளவிலான கூடைப்பந்து போட்டி. தமிழ்நாடு அணி தங்கப் பதக்கம் வென்று சாதனை. காரமடை எஸ்விஜிவி பள்ளி மாணவி தக்ஷிதாவுக்கு பள்ளி சார்பில் பாராட்டு.




கோவை, டிச. 22–

தேசிய அளவிலான கூடைப்பந்து போட்டி உத்தரகாண்ட் மாநிலம் டேராடூனில் அக்டோபர் 2 தேதி முதல் 10ஆம் தேதி வரை நடைபெற்றது. மாநில அளவிலான சப் ஜூனியர் போட்டியில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த அணிகள் தேர்வு செய்யப்பட்டு அதில் 12 பேர் தேசிய அளவிலான விளையாட்டு போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டனர். அதில் காரமடை எஸ்வி ஜிவி பள்ளி எட்டாம் வகுப்பு மாணவி தக்ஷிதா தமிழ்நாடு அணிக்காக தேர்வாகி விளையாடினார்.

தமிழக பெண்கள் அணி இப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றது.

தமிழக அணியில் விளையாடி விளையாடி தங்கப் பதக்கம் வென்ற அணிக்கு ரூபாய் 3 லட்சம் ரொக்க பரிசு பெற்றது. தமிழ்நாடு அணிக்காக விளையாடி பெருமை சேர்த்த எஸ்வி ஜி வி பள்ளி மாணவி தக்ஷிதா விற்கு பள்ளி நிர்வாகம் சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது. மேலும் இந்திய பள்ளி களுக்கான விளையாட்டு குழுமம் நடத்திய 2025 26 ஆம் ஆண்டிற்கான 69 வது தேசிய அளவிலான கூடைப்பந்து போட்டியில் 14 வயதுக்குட்பட்டோர் பிரிவில் காரமடை எஸ்விஜிவி பள்ளி மாணவி அக்ஷிதா மத்திய பிரதேசத்தில் உள்ள தேசிய அளவிலான கூடைப்பந்து போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார். 14 வயதுக்குட்பட்ட மாணவர் பிரிவில் மாணவர் அகில் தேசிய அளவிலான போட்டிக்கு தேர்வு பெற்றுள்ளார்.

17 வயதுக்குட்பட்டோர் மாணவிகள் பிரிவில் ஸ்மிதா, சத்தீஸ்கர் மாநிலத்தில் நடைபெற உள்ள தேசிய போட்டியில் விளையாட தகுதி பெற்றுள்ளார். வாலிபால் போட்டியில் மாணவர் பிரிவில் 19 வயதுக்கு உட்பட்டோ பிரிவில் விஜேஷ் குமார் தேசிய அளவில் நடைபெற உள்ள போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார். 14 வயதுக் குட்பட்ட மாணவிகள் பிரிவில் ஜனவர்ஷினி தேசிய வாலிபால் அணிக்கு தேர்வாகி யுள்ளார்.

14 வயதுக்கு உட்பட்ட மாணவியர் பிரிவில் பிரகன்யா தேசிய அளவில் சதுரங்க அணிக்காக தமிழ்நாடு அணி சார்பில் தேர்வாகியுள்ளார்.

தமிழ்நாடு தடகள சங்கம் சார்பில் நடைபெற்ற தடகளப் போட்டியில் 17 வயதுக்கு உட்பட்டோர் மாணவர் பிரிவில் ஈட்டி எரிதல் போட்டியில் எஸ்விஜிவி பள்ளி மாணவன் சுதிக்ஷன் மாவட்ட அளவில் முதலிடம் பெற்று மாநில அளவில் நடை பெற்ற போட்டியில் மூன்றாம் இடம் பெற்று தேசிய அளவிலான போட்டிக்கு போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

சாதனை மாணவ, மாணவிகளை எஸ்வி ஜிவி பள்ளி நிர்வாகம் சார்பில் பாராட்டு நடைபெற்றது. பள்ளி தாளாளர் டாக்டர் பழனிச்சாமி, நிர்வாக அறங்காவலர் லோகு முருகன், முதல்வர் சசிகலா, செயலாளர் ராஜேந்திரன், அறங்காவலர் தாரகேஸ்வரி, நிர்வாக அதிகாரி சிவ சதீஷ்குமார், பொருளாளர் ரத்தினசாமி அறங்காவலர்கள் ராஜேந்திரன், வேலுச்சாமி மற்றும் பயிற்சியாளர்கள் மாரியப்பன், கிரி, பாபு,அஜித், உடற்கல்வி ஆசிரியர்கள் சந்திரசேகர், ரம்யா காயத்ரி, ஆசிரிய ஆசிரியர்கள், பாராட்டி வாழ்த்தினார்.

# கள்ளக்குறிச்சியில் கிராம பெண் உதவியாளர் தூக்கிட்டு தற்கொலை.

கள்ளக்குறிச்சி நவ 22

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கிராம பெண் உதவியாளர் ஜாகிதா பேகம் திடீரென்று தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியால் ஏற்பட்ட மனஅழுத்தத்தால் அவர் தற்கொலை செய்துள்ளதாக குடும்பத்தினர் குற்றம்சாட்டி உள்ளனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சிவனார் தங்கள் கிராமத்தில் கிராம உதவியாளராக பணியாற்றி வருபவர் ஜாகிதா பேகம். இவர் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் தான் ஜாகிதா பேகம் தூக்கில் பிணமாக தொங்கினார். முதற்கட்ட விசாரணையில் அவர் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளது தெரியவந்துள்ளது. இருப்பினும் தற்கொலைக்கான காரணமாக என்ன என்பது தெரியவில்லை.

அதேவேளையில் குடும்பத்தினர் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியால் ஜாகிதா பேகம் மனஅழுத்தத்துக்கு உள்ளானதாகவும், அதனால் அவர் தற் கொலை செய்துள்ளதாக குற்றம்சாட்டுகின்றனர்.

இதுபற்றி போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு ஆளும் திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சியினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

தமிழகத்தில் கடந்த 4ம் தேதி வாக்காளர் பட்டியலில் தீவிர திருத்தம் தொடங்கியது. இந்த பணி அடுத்த மாதம் (டிசம்பர் ) 4ம் தேதி வரை நடைபெற உள்ளது. இந்த பணியில் வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியில் பெயர் இருப்பவர்களுக்கு விண்ணப்ப படிவம் வாங்கி அதனை பூர்த்தியிட்டு திரும்ப பெறும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தவிண்ணப்பத்தை முறைப்படி நிரப்பி கொடுத்தால் மட்டுமே வாக்காளர் பட்டியலில் பெயர் இருக்கும். இல்லாவிட்டால் ஓட்டுரிமை பறிக்கப்படும். இதனால் தான் எதிர்க்கட்சிகள் இந்த பணிக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். மேலும் வாக்காளர்களை தேடி தேடி விண்ணப்ப படிவம் வழங்குவது ஊழியர்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்தி உள்ளதாகவும், இதனால் மனஉளைச்சலுக்கு ஆளாவதாகவும் பலரும் குற்றம்சாட்டி வருகின்றனர். மேலும் தமிழகத்தில் செவ்வாய்க்கிழமை வருவாய் துறையினர் ல் பணி புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழகம் முழுவதும் கிராம உதவியாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், துணை வட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், சர்வேயர்கள், கள உதவியாளர்கள் என ஏறத்தாழ 42 ஆயிரம் பேர் இப்போராட்டத்தில் ஈடுபட்டதால் அனைத்து மாவட்டங்களிலும் பணிகள் பாதிக்கப்பட்டது. இப்படியான சூழலில் தற்போது கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கிராம பெண் உதவியாளர் தற்கொலை செய்துள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## நெல் ஈரப்பதம், விவசாயிகள் நிவாரணம் விவகாரம்:

# திமுக கூட்டணிக் கட்சிகள் தஞ்சை, திருவாரூரில் ஆர்ப்பாட்டம் அறிவிப்பு

சென்னை: நவ.22–

நெல் ஈரப்பத அளவை அதிகரிக்காமல், நிவாரணமும் அளிக்காமல் டெல்டா விவசாயிகளை வஞ்சிக்கும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து ‘மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி’களின் சார்பில் தஞ்சாவூர் மற்றும் திருவாரூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில், “கொள்முதலில் ஈரப்பதம் தளர்வு தொடர்பான தமிழ்நாட்டின் கோரிக்கையை நிராகரித்துள்ளது ஒன்றிய பாஜக. அரசு. கனமழை காரணமாக ஈரப்பதம் அதிகமாகியுள்ள நெல்லினைக் கொள்முதல் செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டின் குரல் பிரதமரின் காதுகளுக்குக் கேட்கவில்லை.

கன மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்குக் கோரப்பட்ட நிவாரணமும் அளிக்காமல், ஈரப்பத அளவையும் அதிகரிக்காமல் தமிழ்நாட்டின் டெல்டா விவசாயிகளை வஞ்சித்து வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், தமிழ்நாட்டின் கோரிக்கைகளை உடனடியாக மறுபரிசீலனை செய்து வேளாண் பெருங்குடி மக்களுக்கு ஒன்றிய அரசு நன்மை செய்திட வேண்டும் என வலியுறுத்தியும் 23.11.2025 அன்று தஞ்சாவூரிலும், 24.11.2025 அன்று திருவாரூரிலும் காலை 10.00 மணியளவில் ‘மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி’ சார்பில் “மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெறும்” இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டம்



சங்கராபுரம் நவ 22

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் ஒன்றியம் ரங்கப்பனூர் கிராமத்தில் கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் ஸி.வி.ஷி.ரி.அர்ச்சனா காமராஜன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பிரியதர்ஷினி மற்றும் கிராம நிர்வாக அலுவலர் பாலசுப்பிரமணியன், உதவி ஆசிரியர் பாலு கிராம சுகாதார செவிலியர் விமலா, மகளிர் சுய உதவி குழு சந்திரலேகா, நதியா அங்கன்வாடி பணியாளர் கவிதா, கிராம பஞ்சாயத்து உறுப்பினர் ரூபாவதி, உள்ளூர் காவல் நிலைய குழந்தை நல காவல் அலுவலர் ரகு ஆஷா, பணியாளர் வீரம்மாள், உள்ளூர் இளைஞர் அமைப்பு பிரதிநிதி மேகலா, குழந்தை பராமரிப்பு நிறுவன பிரதிநிதி சுமதி மற்றும் உறுப்பினர்கள் வல்லவி நித்யா மற்றும் பலர் கலந்து கொண்டனர். இதில் பொதுமக்களுக்கு விழிப்புணர் ஏற்படுத்தி பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இறுதியில் ஊராட்சி செயலாளர் திருமால்வளவன் நன்றி கூறினார்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421